Q.C.004

DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

Name of the Test:	Subordinate Accounts Services Examinations - Paper - I (Audit of Local Bodies / Universities and other Auditable Institutions (With Books)	102

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

IMPORTANT INSTRUCTIONS

OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

a) One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. What is Arterial Road?
ஏர்டியல் சாலை என்றால் என்ன?

(A) Road belonging to Village Panchayat
கிராம பஞ்சாயத்துக்கு சொந்தமான சாலை

(B) Road belonging to Municipality
நகராட்சிக்கு சொந்தமான சாலை

(C) Road belonging to Corporation
மாநகராட்சிக்கு சொந்தமான சாலை

(D) ✓ Any highway which connects towns with one another
இரு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலை

2. Who is the administrator of the Municipal Pensioner's Family Security Fund Scheme?
நகராட்சி ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்பு நிதி யாரால் நிர்வகிக்கப்படுகிறது?

(A) ✓ Director of Local Fund Audit
இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை

(B) Director of State Government Audit
இயக்குநர் மாநில அரசுத் தணிக்கை

(C) Accountant General
பொது கணக்காளர்

(D) Director of Pension
ஓய்வூதிய இயக்குநர்

3. What is the contribution to be remitted by the Corporation of Chennai to the Institute of Urban Studies per annum as per G.O.Ms.No.126 MAWS Department, dated 13.05.1996?
அரசு ஆணை எண் 126 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை, நாள் 13.05.1996 -ன் படி சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் கோவைக்கு ஆண்டுக்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை எவ்வளவு?

(A) Rs. 1,00,000/-
ரூ. 1,00,000/-

(B) Rs. 50,000/-
ரூ. 50,000/-

(C) ✓ Rs. 2,00,000/-
ரூ. 2,00,000/-

(D) Rs. 35,000/-
ரூ. 35,000/-

4. As per local fund audit Act 2014, Audit on the accounts or records of a local authority or local fund relating to retiring or retired officials for a specific period for a specific purpose on the request of the controlling authority is
உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம் 2014-ன் படி கட்டுபாட்டு அதிகாரி கேட்டுக் கொண்டவாறு அல்லது அரசாணையின் கீழ் பணி ஓய்வுபெறும் அல்லது பணி ஓய்வு பெற்ற அலுவலர் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு அல்லது உளளாட்சி நிதியத்தின் குறிப்பிடப்பட்ட கால அளவிற்கான கணக்குகளை அல்லது பதிவுருக்களை குறிப்பிட்ட நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படும் தணிக்கை.

(A) Special Audit
சிறப்பு தணிக்கை

(B) Performance Audit
செயல்பாட்டு தணிக்கை

(C) ✓ Transaction Audit
வரவு செலவு தணிக்கை

(D) Pre-audit
முன் தணிக்கை

5. In case where the Mandays for audit is less than fifteen days the penalty imposed for non-production of records as per para 9 (a) (ii) of the Local Fund Audit Act 2014 shall. be
தணிக்கைக்கான மனித நாட்கள் பதினைந்து நாட்களுக்குக் குறைவாக இருக்கும் நேர்வுகளில் பதிவுருக்கள் ஒப்படைக்காத நிறுவனங்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 9 (a) (ii) -ன் படி விதிக்கப்படும் அபராதத்தொகை ரூ.

(A) Rs. 500/-
ரூ. 500/-

(B) ✓ Rs. 1,000/-
ரூ. 1,000/-

(C) Rs. 1,500/-
ரூ. 1,500/-

(D) Rs. 2,000/-
ரூ. 2,000/-

6. If the auditor is satisfied in all material in respects of the annual accounts and found that accounts have been compiled properly then the following certificate will be issued.
ஆண்டுக் கணக்குகள் குறித்து அனைத்து முக்கியமான வகைகளிலும் தணிக்கையாளர் மன நிறைவு அடைந்தால் வழங்கப்படும் சான்றிதழ்.

(A) ✓ Unqualified Certificate
குறையின்மை சான்றிதழ்

(B) Qualified Certificate
குறையுள்ளது என்பதற்கான சான்றிதழ்

(C) Disclaimer Certificate
மறுப்புத் துறப்புச் சான்றிதழ்

(D) Adverse Certificate
முரண் தெரிவிப்பு சான்றிதழ்

7. Who is the Vice-Chairman of the Panchayat Union High Level Committee at State Level ?
மாநில அளவிலான ஊராட்சி ஒன்றியங்களின் உயர்மட்டக் குழுவின் துணை தலைவராக செயல்படுபவர் யார் ?

(A) Director of Rural Development
இயக்குநர் ஊரக வளர்ச்சி

(B) Director of Local Fund Audit
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை

(C) Regional Joint Director of Local Fund Audit
மண்டல இணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை

(D) Government Representative
அரசின் பிரதிநிதி

8. The amendment to the audit report within six months from the date of approval of audit report, can be done by whom?
தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தணிக்கை அறிக்கையில் திருத்தங்கள் அல்லது பின் இணைப்பு யாரால் வெளியிடப்படும் ?

(A) By the issuing authority
வெளியிடும் அலுவலர்

(B) By the Director
இயக்குநர்

(C) By the Director with the permission of the Government
இயக்குநர் அரசின் அனுமதி பெற்ற பின்னர்

(D) By the Originator of the para
பத்தி வரையப்பட்ட அலுவலரால்

9. The time limit for the payment of audit fees by the institution is
தணிக்கை கட்டணம் செலுத்துவதற்கான கால நிர்ணயம் எவ்வளவு?

(A) One year from the date of issue of audit report
தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்ட ஒரு வருடத்திற்குள்

(B) One year from the date of receipt of audit report
தணிக்கை அறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு ஆண்டுக்குள்

(C) One year from the date of completion audit
தணிக்கை முடிவுற்ற ஓராண்டுக்குள்

(D) Within the completion of the next financial year
அடுத்த நிதியாண்டு முடிவடைவதற்குள்

10. As per Section 12 of Local Fund Audit Act 2014, the contents Audit report contains how many parts?
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு12 ன் படி தணிக்கை அறிக்கை எத்தனை பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்?

(A) 5 Parts
5 பகுதிகள்

(B) 7 Parts
7 பகுதிகள்

(C) 9 Parts
9 பகுதிகள்

(D) 6 Parts
6 பகுதிகள்

11. Tamil Nadu Local Fund Audit Rules 2016 came into force with effect from
உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016 எப்பொழுது முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது?

(A) 24.08.2016

(B) 14.08.2016

(C) 28.08.2016

(D) 01.08.2016

12. The due date for the submission of annual accounts to audit department in respect of Municipality is _____ of succeeding year.
நகராட்சிகளின் ஆண்டு கணக்குகள் தணிக்கைத் துறைக்கு சமர்ப்பிக்க வேண்டிய நாள்?

(A) July 31st
ஜூலை 31

(B) June 30th
ஜூன் 30

(C) April 30th
ஏப்ரல் 30

(D) August 15th
ஆகஸ்டு 15

13. As per G.O.Ms.No. 295 Labour and Employment Department, dated 17.12.2013, the percentage of amount deducted from the total estimate of the work towards Labour Welfare Fund was
அரசாணை எண் 295 தொழிலாளர் (ம) வேலைவாயப்ப்புத்துறை நாள் 17.12.2013-ன் படி, வேலையில் மதிப்பில் எத்தனை சதவீதம் தொழிலாளர் நல நிதிக்கு பிடித்தம் செய்ய வேண்டும்.

(A) 1%
(B) 0.03%
(C) 3%
(D) 0.3%

14. As per Local Fund Audit Act 2014, which of the following Section deals with Audit of institutions not included in the Schedule?
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-ன்படி எந்தப் பிரிவு பட்டியலில் இல்லாத நிறுவனங்களின் தணிக்கையை பற்றி கூறுகின்றது?

(A) Section 4
பிரிவு 4
(B) Section 5
பிரிவு 5
(C) Section 6
பிரிவு 6
(D) Section 7
பிரிவு 7

15. The cost of audit of Anna University is
அண்ணா பல்கலைக்கழக தணிக்கைக் கட்டணம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

(A) Actual cost
உண்மை செலவினம்
(B) Average cost
சராசரி செலவினம்
(C) Free of cost
கட்டணம் ஏதுமில்லை
(D) 50% of actual expenditure
உண்மை செலவினத்தில் 50%

16. Audit fee for Local Planning authority is
உள்ளூர் திட்டக்குழுமத்திற்கான தணிக்கைக் கட்டணம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

(A) Actual cost
உண்மை செலவினம்
(B) Average cost
சராசரி செலவினம்
(C) Free of cost
கட்டணம் ஏதுமில்லை
(D) 50% of actual expenditure
உண்மை செலவினத்தில் 50%

17. Which constitutional amendment accorded constitutional status to the Panchayat Raj Institutions?
பஞ்சாயத்துராஜ் நிறுவனங்களுக்கு பின்வரும் அரசியலமைப்பு திருத்தத்தின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டது?

(A) 72nd
72 வது திருத்தம்

(B) 73rd
73 வது திருத்தம்

(C) 74th
74 வது திருத்தம்

(D) 75th
75 வது திருத்தம்

18. The revised block grant fixed to the Universities as per G.O.Ms.No.110 Higher Education (K1) Department, dated 12.06.2018 was implemented from
அரசாணை எண். 110 உயர்கல்வி (கே1) துறை நாள் 12.06.2018 -ன் படி பல்கலைக்கழகங்களுக்கு திருத்தப்பட்ட மொத்த நிதி நல்கை எந்த தேதி முதல் அமுல்படுத்தப்படுகிறது?

(A) 01.01.2018

(B) 01.06.2018

(C) 01.04.2018

(D) 01.07.2018

19. As per G.O.Ms.No. 56 Higher Education (H1) Department, dated 25.02.2000, if the conditions prescribed in the Government Order was not adhered to, the _____ pay and allowances paid to the Assistant Registrar and Deputy Registrar will be disallowed for grant.
அரசாணை எண். 56 உயர்கல்வி துறை (H1) துறை நாள் 25.02.2000-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படாவிடின் பின்வரும் விகிதத்தில் பல்கலைக்கழக உதவி பதிவாளர் மற்றும் துணைப்பதிவாளருக்கு அளிக்கப்பட்ட ஊதிய மற்றும் இதர படிகள் மானியக் கணக்கீட்டிற்கு கழிக்கப்படும்.

(A) Entire pay and allowances
முழு ஊதியம் மற்றும் படிகள்

(B) Differences in the Pay and allowance alone
ஊதிய மற்றும் படிகளுக்கான வேறுபாட்டு தொகை மட்டும்

(C) No deduction
எத்தொகையும் கழிக்க வேண்டியதில்லை

(D) Only the pay
ஊதியம் மட்டும்

20. Who is the Licensing Authority to a private market in a Panchayat Union area?
ஊராட்சி ஒன்றிய பகுதியிலுள்ள தனியார் சந்தைக்கு உரிமம் வழங்கும் அதிகாரி யார்?

(A) Panchayat Union Council
ஊராட்சி ஒன்றியக்குழு

(B) Project Director DRDA
திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை)

(C) Assistant Director (Panchayat)
உதவி இயக்குநர் (ஊராட்சி)

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

21. As per Tamil Nadu Panchayat Act 1994, Under Section 155 (1) private cart stand license was issued by
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 155 (1) -ன்படி தனியார் வண்டி நிறுத்துமிடத்திற்கு யாரால் உரிமம் வழங்கப்படுகிறது?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) District Panchayat Council
மாவட்ட ஊராட்சிக்குழு

(C) Panchayat Union Council
ஊராட்சி ஒன்றியக்குழு

(D) Village Panchayat Board
ஊராட்சிக்குழு

22. Section 108 (1) of the TNDM Act 1920 deals with which Tax?
தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 108 (1) எதைப்பற்றி விவரிக்கிறது?

(A) Property Tax
சொத்து வரி

(B) Water Tax
குடிநீர் வரி

(C) Servant Tax
வேலையாள் வரி

(D) Pilgrim Tax
யாத்ரீகர் வரி

23. In the Urban Local Bodies, the refund of Lapsed Deposit need prior sanction of
நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் காலங்கடந்த வைப்புத்தொகை திருப்பியளிக்க யாருடைய முன் அனுமதி தேவை?

(A) Commissioner
ஆணையாளர்

(B) Manager
மேலாளர்

(C) Council
நகர்மன்றம்

(D) Assistant Director Panchayat
உதவி இயக்குநர் ஊராட்சி

24. The minimum period required for granting vacancy remission is
நகராட்சிகளில் சொத்துவரி கழிவு அளிக்க குறைந்தபட்ச கால அளவு எவ்வளவு?

(A) 30 days
30 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 120 days
120 நாட்கள்

25. In Town Panchayats regarding time barred taxes and fees audit objections the percentage of amount to be recovered from the Executive Officer in the absence of the Head Clerk is
பேரூராட்சிகளில் காலங்கடந்த வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படாமல் உள்ள இனங்களின் தணிக்கைத்தடை இழப்புகளுக்கு தலைமை எழுத்தர் இல்லாத பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எத்தனை சதவிகித இழப்புத்தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

(A) 5%

(B) 20%

(C) 40%

(D) 60%

26. Which one of the following is not coming under Concurrent Audit?
கீழ்க்கண்டவைகளில் எவை உடன் நிகழ் தணிக்கையில் வராது?

(A) Municipality
நகராட்சி

(B) Corporation
மாநகராட்சி

(C) Panchayat Union
ஊராட்சி ஒன்றியம்

(D) Local Library Authority
உள்ளூர் நூலக ஆணைக்குழு

27. Which one of the following is a assigned Revenue of Panchayat Union Council?
கீழ்க்கண்டவற்றுள் எது ஒதுக்கப்பட்ட வருவாய் ஆகும்?

(A) Grants
மானியம்

(B) License Fee
உரிமக்கட்டணம்

(C) House Tax
வீட்டு வரி

(D) Entertainment Tax
கேளிக்கை வரி

28. The balance sheet is prepared to assess the _____ of the institution.
ஐந்தொகை அறிக்கை தயாரிப்பதன் நோக்கம் என்ன?

(A) Profit
நிறுவனத்தின் லாபம்

(B) Financial Position
நிறுவனத்தின் நிதிநிலை

(C) Liabilities
பொறுப்புகள்

(D) Loans
கடன்கள்

29. The bonus granted to a Bill Collector in a Town Panchayat for 100% collection in current demand in a Town Panchayat is
பேரூராட்சிகளில் 100 விழுக்காடு வரி வசூல் செய்யும் வருவாய் உதவியாளருக்கு தகுதியான ஊக்கத்தொகை எவ்வளவு?

(A) One month Salary
ஒரு மாத ஊதியம்
(B) Two months Salary
இருமாத ஊதியம்
(C) 15 days Salary
15 நாள் ஊதியம்
(D) 2% of current collection
நடப்பு கேட்பில் 2%

30. The Sales charges in the market committee is collected at which percentage of the selling of the purchase price?
விற்பனைக்கட்டணம் சந்தை பிரதேசத்தில் வாங்குதல் அல்லது விற்பனை செய்யும் அறிக்கையிடப்பட்ட விளை பொருட்களின் மதிப்பில் எத்தனை சதவீதம் வசூலிக்கப்படுகிறது?

(A) 1%
(B) 2%
(C) 3%
(D) 5%

31. What is the percentage of withheld amount in final bill of a Contractor?
பணி முடிக்கும்போது வேலைக்கான முடிவு பட்டியலில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை சதவீதம் எவ்வளவு?

(A) 12%
(B) 10%
(C) 5%
(D) 2%

32. Which one of the following is not coming under the component under Municipal Fund?
கீழ்க்கண்ட நிதிகளுள் எவை நகராட்சி நிதிகளில் சம்பந்தமில்லாதது?

(A) General Fund
பொது நிதி
(B) Provident Fund
சேமநல நிதி
(C) Elementary Education Fund
ஆரம்ப கல்வி நிதி
(D) Water Supply Fund
குடிநீர் வடிகால் நிதி

33. How many accounts are maintained in a Village Panchayat?
கிராம ஊராட்சிகளில் எத்தனை கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன?

(A) Four
நான்கு
(B) Five
ஐந்து
(C) Seven
ஏழு
(D) Ten
பத்து

34. Which is the main source of income for the Market Committee?
வேளாண் விற்பனை குழுக்களின் முக்கியமான வருவாய் இனம் எது?

(A) Sales charge
விற்பனைக் கட்டணம்

(B) Property Tax
சொத்து வரி

(C) Market fee
சந்தை கட்டணம்

(D) License fee
உரிமக் கட்டணம்

35. Which fee is collected as per Section 8 (1) of the Tamil Nadu Agriculture Produce Sales (Regulating) Act of 1987 from the traders selling the agricultural products?
தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987, பிரிவு 8 (1) - ன் படி அறிக்கையிடப்பட்ட விளைபொருட்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம்

(A) Sales charge
விற்பனைக் கட்டணம்

(B) Mortgage Loan
ஈட்டுக் கடன்

(C) Market Fee
சந்தை கட்டணம்

(D) License Fee
உரிமக் கட்டணம்

36. Library Cess is collected as _____ for every one rupee of property tax / house tax.
வரி, சொத்து வரி / வீட்டு வரியில் ஒரு ரூபாய்க்கு எத்தனை பைசா வீதம் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படுகிறது?

(A) 20 paise for every one rupee
ஒரு ரூபாய்க்கு 20 பைசா வீதம்

(B) 10 paise for every one rupee
ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம்

(C) 5 paise for every one rupee
ஒரு ரூபாய்க்கு 5 பைசா வீதம்

(D) 50 paise for every one rupee
ஒரு ரூபாய்க்கு 50 பைசா வீதம்

37. As per G.O.Ms.No.112 Higher Education (H1) Department, dated 24.03.1999 the Retirement age of University teacher is?
அரசு ஆணை எண் 112 உயர்கல்விதுறை (எச்1) துறை நாள் 24.03.1999 -ன்படி பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது _____ ஆகும்.

(A) 60 years
60 ஆண்டுகள்

(B) 62 years
62 ஆண்டுகள்

(C) 58 years
58 ஆண்டுகள்

(D) 65 years
65 ஆண்டுகள்

38. As per G.O.Ms.No. 350 Higher Education (H1) Department, dated 09.09.2009 the pay of the directly recruited Professor shall be fixed at Rs. _____ in the pay band of Rs.37,400 - 67,000.
அரசு ஆணை எண். 350 உயர்கல்விதுறை (எச்1) துறை நாள் 09.09.2009 -ன்படி நேரடியாக நியமனம் செய்யப்படும் பேராசிரியருக்கு ஊதிய கட்டு ரூ. 37,400 - 67,000 -ல் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஊதியம் எவ்வளவு?

(A) Rs. 37,400
ரூ. 37,400

(B) Rs. 43,000
ரூ. 43,000

(C) Rs. 44,500
ரூ. 44,500

(D) Rs. 42,500
ரூ. 42,500

39. According to Tamil Nadu Town and Country Planning Act, Section 50 amended later on building License is valid for _____
நகர ஊரமைப்பு சட்டம் பிரிவு (திருத்தப்பட்ட 50-ன் படி கட்டிட உரிமத்தின் அனுமதி காலம் எவ்வளவு?

(A) Five years
ஐந்து ஆண்டுகள்

(B) Three years
மூன்று ஆண்டுகள்

(C) Two years
இரண்டு ஆண்டுகள்

(D) Four years
நான்கு ஆண்டுகள்

40. The percentage of Income Tax deducted from a lessee of vehicle stand belong to a local body?
வாகனங்கள் நிறுத்துமிட குத்தகை பெற்ற குத்தகைதாரரிடமிருந்து எத்தனை சதவீதம் வருமானவரி பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

(A) 1%

(B) 2%

(C) 4%

(D) 10%

41. As per Section 16 (a) of Tamil Nadu Transparency in Tender Act 1998, payment in advance is permitted for the following purpose.
தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998 பிரிவு 16 (2) -ன் படி எத்தகைய நிகழ்வுகளில் முன்பணம் அனுமதிக்கலாம்?

(A) Single source of supplies
ஒற்றை விநியோகிப்பாளர் உள்ள நிகழ்வுகளில்

(B) Consignment on imported items
இறக்குமதி இனங்களில்

(C) ✓ Purchases during natural calamity and emergency
அவசர நிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில்

(D) Estimate of works or supplies exceeds one crore
மதிப்பீடு தொகை ரூபாம் ஒரு கோடிக்கு மேல் உள்ள இனங்களில்

42. As per Section 11 of Tamil Nadu Transparency in Tender Act 1998, an aggrieved tenderer can go for appeal to Government within _____ from the date of receipt of order.
தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998, பிரிவு 11- ன்படி ஒப்பந்ததாரர் எத்தனை நாட்களுக்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்?

(A) ✓ 10 days
10 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 20 days
20 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

43. As per Tamil Nadu Transparency in Tender Rules 2000, Section 33, which among the following is termed as Low Value Procurement?
தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000 பிரிவு 33-ன் படி பின்வருவனவற்றுள் எதனை குறைந்த விலை கொள்முதல் என்ற பிரிவில் வகைப்படுத்தலாம்?

(A) Which is less Rs.15 lakhs in value for construction
ரூ.15 லட்சத்துக்கு குறைவான கட்டுமானங்கள்

(B) Which is less than Rs.15 lakhs in other purchases
ரூ.15 லட்சத்துக்கு குறைவான இதர கொள்முதல்

(C) ✓ Which is less than Rs.25 lakhs in value for construction
ரூ.25 லட்சம் அதற்கு குறைவான கட்டுமானங்கள்

(D) Which is less than Rs.15 lakhs for other consulting services
ரூ.15 லட்சத்துக்கு குறைவான இதர சேவையினங்கள்

44. As per G.O.Ms.No.243, Finance (Salaries) Department, dated 21.08.2017, if the value of procurement (Works) is above Rs.50 Lakhs and upto Rs.3 Crores, the norms for advertisement of tender notice is _____

அரசு ஆணை எண். 243 நிதி ஊதியம் துறை நாள் 21.08.2017-ன் படி ஒரு கொள்முதல் (வேலை) மதிப்பீடு ரூ. 50 லட்சத்துக்கு மேல் ஆனால் ரூ.3 கோடிக்கு உள்பட்ட நிலையில் அதனை பின்வரும் எப்பத்திரிகையில் விளம்பரம் அளிக்கப்பட வேண்டும்?

(A) ✓ All editions in the State both Tamil and English
மாநிலத்திலுள்ள தமிழ் (ம) ஆங்கில பதிப்புகளில்

(B) All District Editions in Tamil and English
மாவட்ட அனைத்து தமிழ் (ம) ஆங்கிலம் பதிப்புகளிலும்

(C) All English Editions in South India
தென்னிந்திய அளவில் அனைத்து ஆங்கில பதிப்புகளிலும்

(D) All editions in the State in Tamil and English South India Editions
மாநிலத்திலுள்ள தமிழ் பதிப்புகள் மற்றும் தென்னிந்திய அளவில் ஆங்கில பதிப்புகள்

45. For the calculation of property tax, the discount allowed for the building for 5 years is

சொத்துவரி கணக்கிடுதலில் 5 வயது கட்டிடத்துக்கு அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி எவ்வளவு?

(A) 10%
10%

(B) 20%
20%

(C) 5%
5%

(D) ✓ No discount
தள்ளுபடி இல்லை

46. The revenue fund account in a Municipality includes _____

நகராட்சியில் பராமரிக்கப்படுகிற வருவாய் நிதி கணக்கு என்பது பின்வரும் நிதியினை உள்ளடக்கியது.

(A) Library Cess
நூலக வரி

(B) Devolution Fund
பகிர்மான நிதி

(C) ✓ Library Cess and Devolution Fund
நூலக வரி மற்றும் பகிர்மான நிதி

(D) General Fund
பொது நிதி

47. Which local body levies, Local Cess on land revenue payable to the Government?
அரசுக்கு செலுத்தப்படுகிற நிலவரியின் மீது உள்ளூர் வரி பின்வரும் எந்த நிறுவனத்தினால் விதிக்கப்படுகிறது?

(A) Corporations
மாநகராட்சி

(B) Village Panchayat
கிராம ஊராட்சிகள்

(C) Municipalities
நகராட்சி

(D) Town Panchayat
பேரூராட்சிகள்

48. When was the accrual system of accounting introduced in the Town Panchayat?
பேரூராட்சிகளில் இயல்புநிலை கணக்கு எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது?

(A) 2001-02

(B) 2002-03

(C) 2003-04

(D) 2000-2001

49. The tender document shall include a price adjustment clause, when the period of agreement exceeds _____
ஒப்பந்ததாரருக்கு விலையேற்றத்தொகை வழங்குவது குறித்த பிரிவினை ஒப்பந்த புள்ளி படிவத்தில் சேர்க்க வேண்டுமெனில் ஒப்பந்த காலம் _____ அதிகமாக இருத்தல் வேண்டும்.

(A) 6 months
ஆறு மாதங்கள்

(B) 15 months
15 மாதங்கள்

(C) 18 months
18 மாதங்கள்

(D) 12 months
12 மாதங்கள்

50. The pre-auditing the claims of final payments for the closure of Provident Fund of the University staff is done as a special case in the concurrent unit of University audit.
பல்கலைக்கழக பணியாளர் சேமநலநிதி (Provident Fund) யினை சிறப்பினமாக முன் தணிக்கை மேற்கொள்ளும் உடனிகழ் தணிக்கை பிரிவு

(A) University of Madras
சென்னை பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(B) Anna University
அண்ணா பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(C) Annamalai University
அண்ணாமலை பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(D) Madurai Kamaraj University
மதுரை காமராசர் பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

51. The classification of Special Grade Town Panchayat based on annual average income is _____
ஆண்டு வருவாய் அடிப்படையில் சிறப்பு நிலை பேரூராட்சியாக வகைப்படுத்தும் பொழுது எவ்வளவு சராசரி வருவாய் இருக்க வேண்டும்?

(A) Above Rs. 500 Lakh
ரூ.500 லட்சத்திற்கு மேல்

(B) Above Rs. 300 Lakh
ரூ.300 லட்சத்திற்கு மேல்

(C) Above Rs. 400 Lakh
ரூ.400 லட்சத்திற்கு மேல்

(D) Above Rs. 200 Lakh
ரூ.200 லட்சத்திற்கு மேல்

52. The classification of Grade II Town Panchayat based on annual average income is _____
ஆண்டு வருவாய் அடிப்படையில் இரண்டாம் நிலை பேரூராட்சியாக வகைப்படுத்தும் பொழுது எவ்வளவு சராசரி வருவாய் இருக்க வேண்டும்?

(A) Upto Rs. 75 lakh
ரூ. 75 லட்சம் வரை

(B) Upto Rs. 50 lakh
ரூ. 50 லட்சம் வரை

(C) Upto Rs. 100 lakh
ரூ. 100 லட்சம் வரை

(D) Upto Rs. 150 lakh
ரூ. 150 லட்சம் வரை

53. What is the percentage of Village Panchayat audit in a financial year by the Director of Local Fund Audit?
கிராம ஊராட்சிகளின் தணிக்கை ஒரு ஆண்டுக்கு எத்தனை சதவீதம் இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கையால் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்?

(A) 22%
(B) 12%
(C) 50%
(D) 100%

54. The property tax is rounded off to the nearest _____.
சொத்து வரி எந்த அருகாமை மதிப்பிற்கு முழுமையாக்கப்பட வேண்டும்?

(A) Ten Rupees
பத்து ரூபாய்க்கு
(B) One Rupee
ஒரு ரூபாய்க்கு
(C) Five Rupees
ஐந்து ரூபாய்க்கு
(D) Hundred Rupees
நூறு ரூபாய்க்கு

55. The cost of audit fee for the audit on the accounts of Local Library at Chennai?
சென்னை மாவட்ட நூலகத் தணிக்கைக் கட்டணம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

(A) Actual cost
தணிக்கைக்குரிய உண்மைச் செலவினம்
(B) Average cost
சராசரி செலவினத்தின்படி
(C) 50% of actual cost
உண்மை செலனவினத்தின் 50%
(D) 25% of actual cost
உண்மை செலவினத்தின் 25%

56. The annual accounts of University of Madras has to be submitted to audit on or before _____ of every year.
சென்னை பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் தணிக்கைக்கு _____ ல் அளிக்கப்பட வேண்டும்.

(A) 31st July
ஜூலை 31
(B) 30th June
ஜூன் 30
(C) 31st March
மார்ச் 31
(D) 30th September
செப்டம்பர் 30

57. The audit on the accounts of World University Service is done by the Concurrent audit of _____ University.
உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத் தணிக்கை பின்வருவனவற்றுள் எப்பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது?

(A) University of Madras
சென்னை பல்கலைக்கழக தணிக்கைப் பிரிவு

(B) ✓ Madurai Kamaraj University
மதுரை காமராசர் பல்கலைக்கழக தணிக்கைப் பிரிவு

(C) Anna University
அண்ணா பல்கலைக்கழக தணிக்கைப் பிரிவு

(D) Manonmaniam Sundaranar University
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தணிக்கைப் பிரிவு

58. Which tax is collected as a surcharge on railway laws by the railway administration?
ரயில்வே நிர்வாகத்தின் மூலம் புகைவண்டி கட்டணத்தின் மீது மேல்வரியாக வசூலிக்கப்படும் இனம் எது?

(A) Timber Tax
மர வரி

(B) ✓ Pilgrim Tax
யாத்திரீகர் வரி

(C) Tax on servants
வேலையாட்கள் மீதான வரி

(D) Vehicle Animal and Cart Tax
வாகன விலங்கு மற்றும் வண்டி வரி

59. Time barred of Property Tax?
சொத்துவரி காலாவதி ஆகும் காலம்

(A) 12 half years
12 அரையாண்டுகள்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) ✓ 12 years
12 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

60. What is the discount allowed in assessment of property tax if the age of the building is 15 years to 25 years?
15 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரையான பழமையான கட்டிடத்துக்கு சொத்துவரி விதிப்பின் போது அனுமதிக்கக் கூடிய தள்ளுபடி எவ்வளவு?

(A) 5%

(B) 10%

(C) ✓ 15%

(D) 20%

61. The final book of entries in the Accrual system of accounting is _____
இயல்பு நிலை கணக்குகளில் இறுதி பதிவேடு என்பது யாது?

(A) Journal Register
நடவடிக்கை குறிப்புச்சீட்டு பதிவேடு

(B) General Ledger
பேரேடு

(C) Demand Register
கேட்பு பதிவேடு

(D) Project Ledger
திட்ட பதிவேடு

62. Who is responsible for all accounting and financial matters of Tamil Nadu Agricultural University, Coimbatore?
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அனைத்து கணக்குகள் மற்றும் நிதி தொடர்பான பணிகளுக்கு பொறுப்பான அலுவலர் யார்?

(A) The Vice-Chancellor
துணைவேந்தர்

(B) The Registrar
பதிவாளர்

(C) The Finance Officer
நிதி அலுவலர்

(D) The Comptroller
கம்ட்ரோலர்

63. The percentage of discount allowed to thatched building in a Municipality, while calculating property tax is _____
நகராட்சிகளில் சொத்துவரி கணக்கிடும்பொழுது, கூரை வீடுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தள்ளுபடி எவ்வளவு?

(A) 25%

(B) 5%

(C) 15%

(D) 50%

64. What is the maximum percentage of water tax component in a property tax?
ஒரு ஆண்டுக்கான சொத்துவரியில், அதன் உட்கூறான குடிநீர் வரி எத்தனை விழுக்காடு இருக்க வேண்டும்?

(A) 30%

(B) 45%

(C) 35%

(D) 40%

65. What is the rate of discount allowed for buildings in the temporary roof while calculating property in Greater Chennai Corporation?
சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, தற்காலிக மேற்கூரை கொண்டுள்ள கட்டிடங்களுக்கு எத்தனை சதவீதம் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது?

(A) 25%

(B) 20%

(C) 30%

(D) 10%

66. Appeals regarding taxes in Corporation shall be filed to _____
மாநகராட்சிகளில் வரிகள் மீதான மேல்முறையீடு யாரிடம் அனுப்ப வேண்டும்?

(A) ✓ Tribunal
தீர்ப்பாயம்

(B) Taxation appeal committee
வரி மேல் முறையீட்டு குழு

(C) Council
மாமன்றம்

(D) Government
அரசு

67. In brick work, the check measurement shall be done at the stage of _____
செங்கல் கட்டுமான வேலையில் மேல் அளவு எப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) After RCC
ஆர்சிசி வேலை முடிவடைந்த பின்னர்

(B) During brick work
செங்கல் கட்டுமான வேலையின்போது

(C) Before painting
வர்ணம் பூசும்போது

(D) ✓ Before plastering
பூச்சு வேலைக்குமுன்

68. In seven digit account system, major head code 110 represents _____
ஏழு இலக்க எண்கள் கணக்கில் (seven digit account system) பெருந்தலைப்பு எண். 110 எதை குறிப்பிடுகிறது?

(A) ✓ Tax
வரியினங்கள்

(B) Other Income
இதர வரவினம்

(C) Interest Earned
வங்கியிலிருந்து ஈட்டிய வட்டி

(D) Deposit
வைப்புத்தொகை

69. The Section 20 of the Tamil Nadu Local Fund Audit Act 2014, deals with

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 20 எதைபற்றி விவரிக்கிறது?

(A) Submission of Consolidated audit report in the legislature assembly
தொகுப்பு தணிக்கை அறிக்கை சட்டசபைக்கு சமர்ப்பித்தல்

(B) Powers and Functions of the Director Local Fund Audit
இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அதிகாரங்கள்

(C) Audit Fees
தணிக்கை கட்டணம்

(D) Contents of Audit Report
தணிக்கை அறிக்கையில் அடங்கியுள்ளவைகள்

70. What is the regularization fees in a Town Panchayat as per G.O.Ms.No.172 / Housing and Urban Development (UD-4-3) Department, dated 13.10.2017?
அரசு ஆணை எண். 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD-4-3) நாள் 13.10.2017- ன் படி, பேரூராட்சிகளின் முறைப்படுத்துதல் கட்டணம் எவ்வளவு?

(A) Rs. 50 Per sqm
ரூ. 50 Per sqm

(B) Rs.30 Per sqm
ரூ. 30 Per sqm

(C) Rs. 40 Per sqm
ரூ. 40 Per sqm

(D) Rs.60 Per sqm
ரூ. 60 Per sqm

71. What is the monetary limit fixed for a Panchayat Council to accord administrative sanction for electrical maintenance works?
கிராம பஞ்சாயத்தில் மூலதன நிதி சம்பந்தப்பட்ட வேலைகள் மற்றும் மின்பராமரிப்பு வேலைகளுக்கான நிர்வாக அனுமதி கிராம ஊராட்சி மன்றத்தால் அனுமதிக்கப்படும் அதிக பட்ச தொகை.

(A) Upto Rs. 4 Lakh
ரூ. நான்கு லட்சம் வரை

(B) Upto Rs. 5 Lakh
ரூ. ஐந்து லட்சம் வரை

(C) Upto Rs. 2 Lakh
ரூ. இரண்டு லட்சம் வரை

(D) Upto Rs. 3 Lakh
ரூ. மூன்று லட்சம் வரை

72. What should be the minimum height of slab culvert?
சிறு பாலங்களில் slab culvert ன் உயரம் எவ்வளவு?

(A) 1.725 m
1.725 மீ

(B) 1.500 m
1.500 மீ

(C) 2.725 m
2.725 மீ

(D) 2.500 m
2.500 மீ

73. Administrative reports of Village Panchayats shall be submitted to _____ every year.
கிராம பஞ்சாயத்துகளின் நிர்வாக அறிக்கையை _____ ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

(A) The Collector
மாவட்ட ஆட்சியர்

(B) District Panchayat
மாவட்ட பஞ்சாயத்து

(C) ✓ Panchayat Union Council
ஊராட்சி ஒன்றியக்குழு

(D) The Assistant Director (Audit)
உதவி இயக்குநர் (தணிக்கை)

74. What is the percentage of elementary education tax leviable in property tax in respect of Greater Chennai Corporation?
பெருநகர சென்னை மாநகராட்சியினால் விதிக்கப்படுகிற சொத்துவரியில் தொடக்க கல்வி நிதியின் சதவிகித அளவு என்ன?

(A) 9%
(B) 0.90%
(C) 12.40%
(D) ✓ 2.50%

75. Library Cess collected along with property tax is payable to which department / administration.
சொத்துவரியுடன் வசூலிக்கப்பட்ட நூலக வரியை எந்த துறைக்கு / நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்?

(A) Government
அரசுக்கு

(B) ✓ The Department of Public Libraries
பொது நூலக துறைக்கு

(C) The District Collectorate
மாவட்ட ஆட்சியரகத்திற்கு

(D) School Education Department
பள்ளி கல்வித் துறைக்கு

76. Goods and Services Tax is a/an
சரக்கு மற்றும் சேவை வரி என்பது

(A) Direct Tax
நேரடி வரி

(B) Indirect Tax
மறைமுக வரி

(C) Part of Income Tax
வருமானவரியின் ஒரு பகுதி

(D) Professional Tax
தொழில்வரி

77. Goods and Services Tax came into effect from
சரக்குவரி மற்றும் சேவை வரி அமுலுக்கு வந்த நாள்

(A) 01.07.2017

(B) 01.04.2017

(C) 01.01.2017

(D) 01.10.2017

78. What is the percentage of GST admissible on Affiliation fee collected by Anna University, from its affiliated colleges?
அண்ணா பல்கலைக்கழகம் தனது இணைப்புக் கல்லூரிகளிடமிருந்து வசூலிக்கும் இணைப்புக் கட்டணத்தில் வசூலிக்கும் சரக்கு மற்றும் சேவை வரியின் விழுக்காடு எள்வளவு?

(A) 12%

(B) 18%

(C) 24%

(D) 4%

79. What is the percentage of GST admissible on tender values quoted on submission of tenders for Construction works?
கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்த புள்ளி விலையுடன் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கக் கூடிய சரக்கு மற்றும் சேவை வரியின் விழுக்காடு எவ்வளவு?

(A) 18%

(B) 12%

(C) 24%

(D) 2%

80. The audit on the accounts of Tamil Nadu State Council for Higher Education is under the audit purview of concurrent audit of _____
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மையத்தணிக்கை யாரால் மேற்கொள்ளப்படுகிறது?

(A) University of Madras
சென்னை பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(B) Anna University
அண்ணா பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(C) Madurai Kamaraj University
மதுரை காமராசர் பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

(D) Manonmaniam Sundaranar University
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உடனிகழ் தணிக்கைப் பிரிவு

81. The term "basic amenities" as per the Tamil Nadu Town and Country Planning Act does not include which one of the following?
தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்படி "அடிப்படை வசதிகள்" என்ற பதத்திற்குள் அடங்காதது எது?

(A) Parks and play grounds
பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள்

(B) Water supply and electricity
குடிநீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பு

(C) Car and Bungalow
கார் மற்றும் பங்களா

(D) Streets and Open spaces
தெருக்கள் மற்றும் திறந்த வெளி இடங்கள்

82. How many Town Panchayats are in Tamil Nadu?
தமிழ்நாட்டிலுள்ள மொத்த பேரூராட்சிகள் எந்தனை?

(A) 523
(B) 526
(C) 528
(D) 527

83. Which one of the following is exempted from Professional tax?
பின்வருவனவற்றில் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிறுவனம் எது?

(A) National Banks
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்

(B) University employees
பல்கலைக்கழக பணியாளர்

(C) Market Committee
வேளாண் விற்பனைக் கூடம்

(D) Corporation Employees
மாநகராட்சி பணியாளர்கள்

84. In works the revised estimate has to be prepared if the sanctioned estimate exceeds _____%.
வேலைகளில் மதிப்பீடு எத்தனை சதவீதத்திற்கு மேற்பட்டால் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்?

(A) 10%
(B) 12%
(C) ✓ 5%
(D) 20%

85. Section 49 of the Tamil Nadu Town and Country Planning Act deals with
தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 49 வது பிரிவு எதனை குறிப்பிடுகிறது?

(A) ✓ Application of Planning permission
திட்ட அனுமதிக்கு விண்ணப்பித்தல்
(B) Duration of permission
திட்ட அனுமதிக்கான கால அளவு
(C) Powers to stop unauthorized development
அனுமதியற்ற கட்டுமானத்தை நிறுத்துவது
(D) Levy of Development charges
வளர்ச்சி கட்டணம் குறித்து

86. According to Tamil Nadu Panchayat Act 1994, how many times Grama Sabha meeting will be conducted during a year?
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி ஒரு ஆண்டுக்கு எத்தனை முறை கிராமசபை கூட்டம் நடத்தப்பட வேண்டும்?

(A) 3
(B) ✓ 4
(C) 5
(D) 8

87. Which Local body collects Servant Tax?
பணியாளர் வரி வசூலிக்கும் உள்ளாட்சி நிறுவனம் எது?

(A) Special Grade Municipality
சிறப்பு நிலை நகராட்சிகள்
(B) Chennai Corporation
சென்னை மாநகராட்சி
(C) ✓ Municipalities in Hill areas
மலைப்பகுதியிலுள்ள நகராட்சிகள்
(D) Special Grade Town Panchayats
சிறப்புநிலை பேரூராட்சிகள்

88. Which Local body collects Timber Tax?
மர வரி வசூலிக்கும் உரிமையற்ற உள்ளாட்சி நிறுவனம் எது?

(A) Special Grade Municipality
சிறப்பு நிலை நகராட்சிகள்

(B) ✓ Chennai Corporation
சென்னை மாநகராட்சி

(C) Municipalities in Hill areas
மலைப்பகுதியிலுள்ள நகராட்சிகள்

(D) Special Grade Town Panchayats
சிறப்புநிலை பேரூராட்சிகள்

89. What is the amount of subscription deducted from monthly pension of the pensioner of a Panchayat Union towards Medical Reimbursement?
ஊராட்சி ஒன்றிய ஓய்வுதியதாரரின் மாதாந்திர ஓய்வூதியத்தில் மருத்துவ செலவினை மீள பெற்று தருவதற்கான சந்தா தொகை எவ்வளவு?

(A) Rs. 100/-
ரூ. 100/-

(B) Rs.230/-
ரூ. 230/-

(C) ✓ Rs. 150/-
ரூ. 150/-

(D) Rs. 80/-
ரூ. 80/-

90. In which section of Tamil Nadu Transparency in Tender Act 1998, exempted the purchase of Hospital equipments during Covid 19.
தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 1998-ல் எந்த பிரிவின்கீழ் கோவிட் 19 காலகட்டத்தில் மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் வாங்க விலக்களிக்கப்பட்டது?

(A) ✓ 16(a)

(B) 16(c)

(C) 16(b)

(D) 16(d)

91. Who can accord administrative sanction for works under Member of Legislative Assembly Constituency Development Scheme (MLACDS)?
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அலுவலர் யார்?

(A) State Government
மாநில அரசு

(B) Council
மன்றம்

(C) ✓ District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Commissioner
ஆணையாளர்

92. While calculating audit fee for Market Committee which of the following is not admissible?
ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் தணிக்கைக் கட்டணம் கணக்கிட பின்வருவனவற்றுள் எச்செலவினம் கணக்கிடப்படமாட்டாது?

(A) Refund of deposit
வைப்புத்தொகை திரும்ப வழங்குதல்
(B) Building Rent
கட்டிட வாடகை
(C) Contingencies
சில்லறை செலவினங்கள்
(D) Salary to staff
பணியாளர்களின் ஊதியம்

93. A Contractor with the financial capacity of Rs. Upto 30 lakhs shall be classified as _____
30 லட்சம் வரை நிதி வசதியுடைய ஒப்பந்ததாரர் (Contractor) எந்த வகுப்பில் வகைப்படுத்தப்படுகிறார்?

(A) Class III
வகுப்பு III
(B) Class II
வகுப்பு II
(C) Class I
வகுப்பு I
(D) Class IV
வகுப்பு IV

94. The responsibility of a Manager in a Municipality in time barred tax is _____.
காலங்கடந்த வரியினத்திற்கு நகராட்சி மேலாளரின் பொறுப்பு _____.

(A) 20%
(B) 30%
(C) 15%
(D) 10%

95. What is the percentage allowed for project overhead appropriation expenses in the accrual based accounting system?
திட்டப்பணி மேலாண்மை செலவினத்திற்காக இயல்புநிலை கணக்கு முறையில் அனுமதிக்கப்படும் சதவீதம் என்ன?

(A) 10%
(B) 12%
(C) 5%
(D) 11%

96. Fuel expenditure of Block Development Officer (VP) to be met from
ஊராட்சி ஒன்றியத்தில் திட்டப்பிரிவு வட்டார வளர்ச்சி அலுவலரின் வாகனத்திற்கு எரிபொருள் செலவினம் எந்த நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டும்?

(A) General Fund
பொதுநிதி

(B) ✓ State Finance Commission
மாநில நிதிக்குழு மானியம்

(C) General Fund & (SFC)
பொது நிதி மற்றும் மாநில நிதிக்குழு மானியம்

(D) Revenue Fund
வருவாய் நிதி

97. As per G.O.Ms.No.89 Rural Development and Panchayat Raj (PRI) Department, dated 15.06.2015 which account is maintained under Account No.3 in a Village Panchayat
அரசு ஆணை நிலை எண். 89 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை நாள் 15.06.2015 - ன் படி கிராம ஊராட்சியில் கணக்கு எண். 3-ல் பின்வரும் கணக்கு பராமரிக்கப்படுகிறது?

(A) Village Panchayat Fund Account
கிராம ஊராட்சி நிதிக் கணக்கு

(B) ✓ Village Panchayat Centrally Sponsored Schemes Fund Account
கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு (மைய அரசு மானியம்)

(C) Village Panchayat State Fund Schemes
கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு (மாநில அரசு)

(D) Village Panchayat Staff Salary Account
கிராம ஊராட்சி பணியாளர்கள் ஊதியக் கணக்கு

98. The annual track rent fixed by Government for Municipalities as per G.O.Ms.No.172 Revenue Department, dated 28.03.2000, is Rs. _____.
அரசாணை எண். 172. வருவாய்த்துறை நாள் 28.03.2000-ன் படி நகராட்சிகளில் உள்ள தொலைதொடர்பு நிறுவனங்கள் கண்ணாடி இழை கேபிள் பதித்தமைக்கு ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ஆண்டுக்கு செலுத்த வேண்டிய தட வாடகை எவ்வளவு?

(A) ✓ Rs. 5,500/-
ரூ. 5,500/-

(B) Rs. 6,300/-
ரூ. 6,300/-

(C) Rs. 9,400/-
ரூ. 9,400/-

(D) Rs. 4,200/-
ரூ. 4,200/-

99. How much is the Registration Fees to be collected from class II Contractor?
வகுப்பு II ஒப்பந்ததாரரிடம் வசூலிக்கப்பட வேண்டிய பதிவுக்கட்டணம் எவ்வளவு?

(A) Rs. 1,000/-
ரூ. 1,000/-

(B) Rs. 3,000/-
ரூ. 3,000/-

(C) Rs. 5,000/-
ரூ. 5,000/-

(D) Rs. 4,000/-
ரூ. 4,000/-

100. TDS to be deducted at the rate of _____ percent on payments made to the supplier of taxable goods under services as GST where the total value of such supply (Not the invoice value) under an individual contract, exceeds two lakhs fifty thousand rupees.
விநியோகிப்பாளருக்கு வழங்கப்படும் (விலைபட்டியல் மதிப்பு இல்லை) தொகை ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு அதிகமாக உள்ள நிலையில் சரக்கு மற்றும் சேவை வரி எத்தனை விழுக்காடு பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

(A) 2%

(B) 12%

(C) 10%

(D) 1%